thiraimalar.com

# திரைமலர்

வெள்ளிக்கிழமை தோறும்

மலர்-1 இதழ்-12 .காம்

27.10.2023




## தூங்கா நகரமல்ல தூசி நகரமான சென்னை

# 160 கோடி சம்பளம் கேட்கும் அஜித்

# லியோ பட வசூலில் பொய் தியேட்டர் உரிமையாளர் புலம்பல்

# கமலுடன் லிப்லாக்கிற்கு நோ சொன்ன நயன்

## வடிவேலுவை விமர்சிக்க பயப்படும் திரையுலகம்

சமீப காலமாக வடிவேலு என்றாலே ஒரே பரபரப்புதான், விஜயகாந்த் வடிவேலு மோதலுக்கு பின், வடிவேலு திரைத்துறையில் காணாமலேயே போய்விட்டார் என்ற ரீதியில், ஒரு படத்தில் கூட நடிக்க வாய்ப்பு கிடைக்காமல் சும்மாவே இருந்தார்.

தற்போது மீண்டும் சினித்துறையில் மெல்ல தலைகாட்ட துவங்கியுள்ளார், நாய் சேகர் படத்திற்கு பின்பு மிகப் பெரிதாக பேசப்பட்டது, உதயநிதியுடன் இணைந்து நடித்த படமும், ராகவா லாரன்ஸ்சுடன் நடித்த படங்கள் மட்டுமே, இதற்கிடையே வடிவேலுவைப் பற்றி சக நடிகர்கள் யூ டியூப் சேனல்களில் பல்வேறு புரளி, புகார்களை பரப்பிவந்தனர்.

அவர்களுக்கு எச்சரிக்கை விடுவதைப்போன்று "என்னை விமர்சித்தவர்களின் நிலைமையை நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்றும் சில பேர் இல்லாமல் போய்விட்டார்கள் என்றும் சில பேர் சுகர் வந்து கால் விரல்களை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்" என்றும் நாசுக்காக பேசினார்.

வடிவேலுவைப் பற்றி பேசினால் தங்களுக்கும் அந்த நிலைவந்து விடுமோ என்று சக நடிகர்கள் சற்று அஞ்சுவதால், வடிவேலுவைப் பற்றி புறம் பேசுவது தற்போது குறைந்துள்ளது.

## க்ளோஸ் பிரண்ட்டிடம் பேசாத விஜய்

நடிகர் விஜய்யின் நண்பர்களில் மிக முக்கியமான நண்பராக வலம் வருபவர் சஞ்சீவ். விஜயுடன் ஆரம்பகாலத்திலிருந்து நடித்துள்ளார். இவர் சின்னத்திரையில் பிரபலமாக நடித்த சீரியல் திருமதிச் செல்வம்.

இந்நிலையில்... தனது நண்பருடன் சில மாதங்கள் பேசாமல் விஜய் தவிர்த்தார் என்ற செய்தியை சஞ்சீவின் மனைவி வெளிப்படையாக ஒரு சேனலுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

விஜய் தனது ' நண்பன்' பட லான்ச்சுக்கு தன்னுடைய நெருங்கிய நண்பர்களை அழைத்திருந்தாராம். சஞ்சசீவ் மாதிரியே நடிகர் ஸ்ரீநாத்தும் விஜயின் நெருங்கிய நண்பர்.

அந்த விழா சமயத்தில்தான் சஞ்சீவ் திருமதி




செல்வம் சீரியலில் மாட்டிக் கொண்டாராம். எவ்வளவோ அனுமதி கேட்டும் சஞ்சயால் அந்த விழாவிற்கு போகமுடியவில்லையாம். இதனால் விஜய் மிகவும் அப்செட்டாகிவிட்டாராம்.

இந்த காரணத்திற்காக சஞ்சீவிடம் விஜய் கிட்டத்தட்ட 5 மாதம் பேசாமல் இருந்தாராம். அதன் பின்னர் எப்பவும் போல் எதுவுமே நடக்காத மாதிரி பேச ஆரம்பித்துவிட்டார்கள் என்று சஞ்சீவ் மனைவி ப்ரீத்தி கூறியுள்ளார்.

## சூரி சொன்ன விஷயம், ரேட்டை ஏற்றிய அஜித்

லைக்கா நிறுவனம் தயாரிக்கும் விடா முயற்சி படம் மிகுந்த எதிர்பார்ப்பை கூட்டியுள்ளது,

நடிகர் அஜித் நடிப்பில், மகிழ்திருமேனி இப்படத்தை இயக்கி வருகிறார். படத்தின் படப்பிடிப்பு அஜர்பைஜானில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. படத்தில் அஜித் இரட்டை வேடங்களில் நடிப்பதால் த்ரிஷா மற்றும் ரெஜினா ஆகிய இரண்டு கதாநாயகிகள் படத்தில் நடிக்கின்றனர்.

இந்தப் படத்திற்காக அஜித்துக்கு 105 கோடி சம்பளம் என பேசப்பட்டிருக்கிறதாம். இதற்கு முந்தைய படத்தில் 65 கோடி வாங்கிக் கொண்டிருந்த அஜித் இந்தப் படத்திற்காக அதிகரித்திருக்கிறார்.

பொதுவாக அஜித்தை பொறுத்தவரைக்கும் படம் எப்படி இருந்தாலும் சரி, எத்தனை ஹிட்களை கொடுத்திருக்கிறோம் என்றெல்லாம் அஜித் பார்ப்பதே இல்லை. விஜய் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பதை மட்டுமேதான் அஜித் பார்க்கிறார் என்று சினி வட்டாரத்தில் கூறப்படுகிறதாம்.

அதுமட்டுமில்லாமல் இந்த படத்தை முதலில் சத்யஜோதி பிலிம்ஸ்தான் தயாரிக்க இருந்ததாம். திடீரென 105 கோடி என்று சொன்னதும்தான் லைக்கா உள்ள வந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

விடா முயற்சி படம் முடித்த கையோடு அஜித் அடுத்ததாக ஆதிக் ரவிச்சந்திரனுடன் இணைய இருக்கிறாராம்.

விடுதலை படத்தை தயாரித்த எல்ரெட் அஜித்தின் அடுத்த படத்தை தயாரிக்கப் போவதாக சில தகவல்கள் வெளியாகியிருக்கிறது. எல்ரெட்டும் அஜித்தும் எப்படி இணைந்தார்கள் என்றால் அதற்கு காரணமாக இருந்தது நடிகர் சூரி என்று சொல்லப்படுகிறது. அஜித்தின் அப்பா மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க போன சூரியிடம் அஜித் பேசிக் கொண்டிருந்தாராம்.

அப்போது என்ன ப்ராஜக்ட் போய்க் கொண்டிருக்கிறது என அஜித் சூரியிடம் கேட்க விடுதலை படத்தையும் அதன் தயாரிப்பாளர் பற்றியும் சொல்லியிருக்கிறார். ஆரம்பத்தில் 4 கோடி பட்ஜெட்டில் தீர்மானிக்கப்பட்ட படம் இப்போது 40 கோடி வரை வந்து நிற்கின்றது என்றும்,

ஆனால் தயாரிப்பாளரான எல்ரெட் தன் சொந்தச் செலவிலேயே படத்தை தயாரிக்கிறார் என்றதும் அஜித்துக்கு ஒரே ஆச்சரியமாம். மேலும் எல்ரெட் ஏதோ குவாரி பிஸினஸ் செய்து வருவதால் ஒரு பக்கம் காசு வந்து கொண்டுதான் இருக்குமாம். அதனால் எவ்வளவு பணம் கேட்டாலும் தரக்கூடிய தயாரிப்பாளராக எல்ரெட் இருக்கிறார்.

இதன் காரணமாகவே ஏகே 63 படத்தில் அஜித்

இன்னும் 60 கோடி தன் சம்பளத்தில் கூட்டி மொத்தமாக 165 கோடியாக அதிகரித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

## டிடியை ஓதுக்கியதா விஜய் டிவி?

ஜோடி நம்பர் 1, அன்புடன் டிடி, காஃபி வித் டிடி உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் மூலம் மிகப் பிரபலமானவர் நடிகை டி.டி. இவருக்கென்றே பல ரசிகர்கள் உருவாகினார்கள். முன்னணி தொகுப் பாளராகவும் விளங்கினார்.




ஆனால் சமீபகாலமாக டி.டி.யை காணவில்லை, டி.டி.யை தேடிய ரசிகர்களுக்கு அதிர்ச்சி தரும்விதத்தில் டி.டி.க்கு விபத்து காரணமாக காலில் அடிபட்டுள்ளதாகவும், தொடர்ந்து அவரால் நிற்க முடியாத நிலையில் இருப்பதால் வீல் சேரில் அமர்ந்துதான் பயணிக்கிறார் என்ற தகவலால் ரசிகர்கள் வருத்தமடைந்தனர்.

கால் சரியான பின் மீண்டும் தொகுப்பாளராக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், விஜய் டிவி தன்னை ஒதுக்கிவிட்டதாக சமீபத்திய பேட்டி ஒன்றில் டிடி புலம்பியுள்ளார்.

காலில் பிரச்சனை ஏற்பட்டதால், நீண்ட நேரம் நிற்க முடியாது. வாக்கிங் ஸ்டிக் அல்லது வீல் சேர் மூலம் தான் நான் பயணம் செய்கிறேன்.

வெளியே கூட அதிகமாக செல்வதில்லை. 10 ஆண்டுகளாக ஒட என்னால் ஒட முடியாது, நீண்ட நேரம் நிற்க முடியாது. இந்த நோயை குணப்படுத்தவும் முடியாது. இப்படி பட்ட சூழ்நிலையில் நான் இருந்த போது, என்னால் அதிலிருந்து வெளியே வர முடியவில்லை. மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டேன்.

நான் நினைத்த எதையுமே என்னால் செய்ய முடியவில்லை. இத்தனை ஆண்டுகள் நான் வேலை செய்த விஜய் டிவியில் என்னால் ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்க முடியவில்லை. உட்கார்ந்து கொண்டு செய்யும்படி எந்த நிகழ்ச்சியும் இல்லை என்று கூறிவிட்டார்கள். என்று டிடி பேட்டியில் கூறியுள்ளார்.

## வேதாளம் போல் தொடரும் லியோ பட பிரச்சனை வசூலை குறைக்க ஆன்லைனில் வெளியிடப்பட்டதா?

லியோ படத்தின் சர்ச்சை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது, பாடல் வெளியீட்டில் இருந்து, டிரைலர் வெளியிட்டு திரையரங்கு சூரையாடப்பட்டது, சென்னையில் வெளியிட தடை, என்று பிரச்சனை நாளொரு மேனியாக தொடர்ந்து ஒருவழியாக வெளியிடப்பட்ட படத்திற்கு வசூல் சர்ச்சையில் குழப்பம் நிலவுகிறது.

லோகேஷ் கனகராஜ், விஜய் தரப்பில் கூறும்போது, ஜெயிலர் பட வசூலை தாண்டிவிட்டதாகவும், ஹாலிவுட் படத்தை பீட் செய்யும் விதத்தில் வசூல் வேட்டை அமைந்ததாகவும் பேட்டி அளித்தனர்.

லியோ திரைப்படத்தினை சுற்றி தொடர்ந்து விமர்சன ரீதியாக பல குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் இருக்கும் நிலையில் தற்போது ஒரு புதிய தகவலை வெளியிட்டு இருக்கிறார் திருப்பூர் சுப்ரமணியன். அவர் அளித்திருக்கும் விஷயங்கள் ரசிகர்களுக்குமே அதிர்ச்சியை கொடுத்து இருக்கிறது.

தியேட்டர் உரிமையாளர் திருப்பூர் சுப்ரமணியன் ஜெயிலர் தான் எங்களுக்கு நல்ல வசூலை கொடுத்தது. லியோவால் பெரிய லாபம் என எதுவுமே இல்லை. எங்களை மிரட்டியே லியோ தொடர்ந்து ஒட்டி வருகின்றனர். விருப்பம்

thiraimalar.com திரைமலர்







இல்லாமல் தான் செய்வதாக கூறி இருந்தார்.

இந்நிலையில் மீண்டும் அவர் அளித்த பேட்டியில் எனக்கு செவன் ஸ்க்ரீன் ஸ்டுடியோஸின் லலித் குமார் கால் செய்தார். ஏன் இப்படி பேட்டி கொடுத்துக்கிட்டு இருக்கீங்க என சத்தம் போட்டார். அவரே 70, 80 சதவீத லாபத்தினை எடுத்து கொண்டால் நாங்களாம் என்ன பண் ணுவது.

இதுமட்டுமல்லாமல் புக்கிங்கில் நிறைய தில்லா லங்கடியும் செய்தனர். அதாவது, வெளிநாட்டு தியேட்டர்களில் இவர்களே புக்கிங் செய்து கொண்டனர். லலித்துக்கு விஜயை வைத்து அடுத்த படத்தினை தயாரிக்க வேண்டும். அதற் காக இப்படி ஒரு விஷயத்தினை செய்கிறார். ஒரு படத்துக்கே இப்படியென்றால் தமிழ் சினிமா இவர் கைக்கெல்லாம் போனால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் எனவும் குறிப்பிட்டு இருக்கிறார்.

இன்னும் ஒரு தரப்பினர் லியோ படம் கல்லா கட்டக் கூடாது என்பதால்தான் படம் ரிலிஸான அன்றே குவாலிட்டி பிரிண்ட் ஆன்லைனில் சமூக விரோதிகளால் விடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தற்போது லியோ பட சர்ச்சை வேதாளம் போன்று நீண்டு கொண்டே செல்வதாகவே தோன்றுகிறது.

## ஹாலிவுட்டில் நயன்தாரா! நடிகர் கமலுடன் லிப்லாக்கிற்கு நிபந்தனை?

சினிமா வட்டாரத்தில் ஒரு நடிகை பல்வேறு இடையூறுக்கு இடையேயும், குடும்பம் குழந்தை, கணவன், பிசினஸ், வயது பிரச்சனை போன்றவற்றை கடந்து இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கிறார் என்றார் அவர் வேறு யாரும் அல்ல நயன்தாரா மட்டுமே.

தமிழ் சினிமாவின் லேடி சூப்பர்ஸ்டார் என ஸ்டைலாக சுற்றி வருபவர் நயன் தாரா. இப்போ அவர் மார்கெட் சரிந்தால் கூட அம்மணி கவலைப்படாமல் தனக்கென ஒரு தனி ரூட்டை பிடித்து அதில் அசால்ட்டாக பயணம் செய்து கொண்டு இருக்கிறார்.

ஜவான் படத்தின் மூலம் நயன்தாரா பாலிவுட்டில் அடியெடுத்து வைத்தார். அந்த படத்துக்கு அவருக்கு 11 கோடி வரை சம்பளம் கொடுத்ததாக கூறப்படுகிறது. படத்தில் அவர் நடிப்பு பலராலும் பாராட்டுக்களை பெற்றது.

பாலிவுட்டில் தொடர் வாய்ப்புகளும் வர துவங்கியது. தற்போது சஞ்சய் லீலா பஞ் சாலி படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்க இருக்கிறாராம்.

சமீபத்தில் இந்த தகவல் அதிகாரப்பூர்வ தரப்பில் இருந்து கசிந்த நிலையில் அந்த படத்திற்கு நயனுக்கு 12 கோடி வரை சம்பளம் கொடுக்கப்பட இருப்பதாகவும் தக வல்கள் தெரிவிக்கிறது. மேலும் தமிழில் பெரிய வாய்ப்புகள் இல்லாமல் இருந்தது.

தற்போது மணிரத்னம் கமல்ஹாசனை வைத்து இயக்கும் 234வது படத்தில் அவருக்கு ஜோடியாக நயன் நடிக்க இருப்ப தாகவும் கூறப்படுகிறது. அந்த படத்திலும் இந்தி சம்பளமாக 12 கோடி வரையே கேட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

முதல்முறையாக கமல்ஹாசனுக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்க இருக்கிறாராம், ஆனால் அதற்கு ஒரு கண்டிஷன் வைத்ததாகவும் கூறப்படுகிறது.

குறிப்பாக முத்தக்காட்சி, லிப்லாக் காட்சி களில் டூப் போட்டுக்க சம்மதித்தால் மட்டுமே கமலுடன் நடிக்க ஒப்புக் கொள்வதாக கூறியதாக சினிமா வட்டாரத்தில் கிசு கிசு பரபரக்கிறது.

# அப்பாக்கள் இராஜ்ஜியத்தில் மகள்களே இளவரசிகள்

ஆணோ பெண்ணோ இருவருக்கும் குடும்பம் என்று வந்துவிட்டால் இருவருக்கும் பல்வேறு பதவிகள் தன்னால் வந்துவிடும்.

சகோதர, சகோதரிகளுக்க அண்ணன், அக்கா என்ற பதவியும், தாய் தந்தைக்கு மகன் மகள் என்ற பதவியும், தாத்தா, பாட்டிக்கு பேரன் பேத்தி என்ற பதவி... இதுபோல ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண் பெண் இருவருக்கும் ஒவ்வொரு பதவி தன்னால் வந்துவிடும்.

இதில் திருமணமாகியபின் ஒரு ஆணிற்கு கிடைக்கும் குடும்ப பதவி மிகவும் சவாலானது, அதுவும் ஒரு பெண்ணிற்கு கணவனாக இருப்பது சுலபம்.

சரிமா, சாரிமானு சொல்லிட்டு மாசத்துக்கு ரெண்டு சாரி எடுத்துக் கொடுத்து பொறுப்புள்ள கணவனா காலம் தள்ளிடலாம்.

ஆனால்

ஒரு தந்தையாக இருப்பதுதான் கடினம்.

தம் உதிரத்தில் உதிக்கும் அந்த உயிரின் ஒரு துடிப்பு கூட இதய துடிப்பை எகிற வைத்து விடும் தந்தைக்கு.

அதுவும் பெண் குழந்தை என்றால் தாயை விட இமையில் வைத்து பாதுகாப் பான் தந்தை என்பவன்.

மகளுக்கு..

ஒரு வழிகாட்டியாய்.. சுக துக்கங்களில் இருந்து பாதுகாக்கும் பாதுகாவலனாய் இருக்க வேண் டும் என்று நினைப்பவன்தான் தந்தை.

தன் மகளின் கண்களில் இருந்து கண்ணீரே சிந்தக்கூடாது என்று அவன் இறக் கும்வரை பேராசை கொள்பவன் தான் தந்தை.

தான் ஈட்டும் பொருள் அத்தனையும் தன் மகளுக்கு கொடுப்பதற்கு தயங்காதவன் தகப்பன். பலர் கடன் பட்டு திருமணத்தை நடத்திவிட்டு கஷ்டபடுறவங்கள பார்த்திருக் கேன்.

மகளின் பிறப்பில் இருந்து அவன் இறக் கும் வரை பல அவதாரங்களை எடுக்க வேண்டி இருக்கு.

கல்லூரிக்கு அனுப்புறதல இருந்து, இன் னொரு கையில புடிச்சி கொடுத்த பிறகும், ரிடையர்டு ஆவாத பொறுப்பு தான் அப்பன் என்ற பொறுப்பு.

ராமன் வேடமிடும் அரக்கர்களின் தவ றான காதல் வலையில் சிக்கினால் ஒரு நண்பனாக இருந்து புரிய வைத்து அதில் இருந்து மீட்கும் மீட்பராக இருக்க வேண்டும்.

மகளை நினைத்து வயிற்றில் மட்டுமே நெருப்பை கட்டி கொண்டிருப்பாள் தாய்ஞ் ஆனால் பொண்ணுக்கு பொன் சேர்க்கனும்னு இந்த பிரதேசத்தில் எத்தனை தந்தைமார்கள் கொதிக்கும் வெயிலில் உடல் எல்லாம் தனலாக extra overtime பாக்கறாங்க தெரியுமா??

தன் மகள் இளவரசியாக இருக்க வேண்டும் என்று காலத்துக்கும் சேவகம் பார்ப்பவன் தான் தகப்பன்.

"அப்பாக்களின் ராஜ்ஜியத்தில் மகள்களே என்றும் இளவரசிகள் தான்"



thiraimalar.com திரைமலர்

கதை, கவிதை, நேர்காணல், துணுக்கு செய்திகள், ஜோக், சினித்துறை செய்திகள் அனைத்தையும் வரவேற்கிறோம்.

## நமது இதழில் உங்கள் படைப்பு வெளிவரவேண்டுமா?

சாதனையாளர், தொழில்முனைவோர், கல்வியாளர், கலைத்துறையினர், சமூக சேவையாளர், சிந்தனையாளர், கவிஞர் என அனைத்து துறையினரின் சாதனைகளையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்த எங்களை தொடர்பு கொள்ளவும்.

## +919444264610



# காஸ்டியூம் டிசைனரான நாயுடு ஹால் முதலாளி

சினிமா மீதான மனிதனின் பெருங்காதலே அதனை இன்றும் உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. சினிமாவுக்காக வெர்னர் ஹெர்சாக் ஷுவை குக்கரில் வேக வைத்து சாப்பிட்டார், சப்பாத்தி கள்ளியில் வெறுங்காலில் நடந்தார்.

அவரளவுக்கு இல்லையென்றாலும் ஜோசப் தளியத் ஜுனியரும் ஒரு கலகக்காரரே. திருவனந் தபுரம் (அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானம்) உயர்நீதிமன்ற நீதிபதியான தந்தையின் விருப்பத் துக்கு மாறாக சினிமாவுக்கு வந்தவர் ஜோசப் தளியத் ஜுனியர்.

நாற்பதுகளின் மத்தியில், இயக்குனர் சௌந்தர ராஜனிடம் உதவியாளராகச் சேர்ந்த தளியத் சினிமா கற்றுத் தேர்ந்த பின்னர் தனது நண்பர் எஃப்.நாகூருடன் இணைந்து, மலையாளத்தில் ஆத்மசாந்தி என்ற படத்தை இயக்கியவர் (இந்தப் படம் இதே பெயரில் தமிழில் 'டப்' செய்யப்பட்டு வெளியானது) அடுத்து மல்லிகா என்ற படத்தை தமிழில் தயாரித்து, இயக்கினார்.

நாஞ்சில்நாடு டி.என்.ராஜப்பா இப்படத்திற்கு வசனம் எழுதினார். பத்மினி, ஜெமினி கணேசன் பிரதான வேடங்களில் நடித்தனர். படம் பரவலான வரவேற்பைப் பெற, அதனை இந்தியில் ரீமேக் செய்தார்.

இந்தியில் பத்மினி தவிர மற்ற அனைவரும் மாற் றப்பட்டனர். ஜெமினி கணேசன் நடித்த வேடத்தில் சுனித் தத் நடித்தார்.

கதைப்படி பத்மினியும், அவரது தங்கையும் அனாதைகள். தங்கையின் பார்வை ஒரு விபத்தில் பறிபோயிருக்கும். அவளது கண் சிகிச்சைக்காக பத்மினி இரவு விடுதியில் நடனமாடும் வேலையை செய்வார்.

ஒருமுறை சாலையில் மயக்கமாகிக் கிடக்கும் சுனில் தத்தை காப்பாற்றுவார். அவருடையது பணக்கார குடும்பம். தந்தையின் விருப்பத் துக்கு மாறாக சுனில் தத் ஹோட்டல் தொழிலில் ஈடுபடுவதால் தந்தை, மகனுக்குள் புகைச்சல் இருக்கும்.

இந்த நேரத்தில் பத்மினி இரவு விடுதியில் நடன மாடுவது தெரியவர, அவரை பாலியல் தொழிலாளி என சுனில் தத் திட்டிவிடுவார்.

தங்கையின் கண் சிகிச்சைக்கு பணம் சேர்க்கவே பத்மினி நடனம் ஆடி வருகிறார் எனத் தெரியவர, சுனில் தத்தின் கோபம் தணியும், தனது அவசரத்தனத்தை நொந்து கொள்வார், மறுபடியும் பத்மினியுடன் இணக்கமாவார்.

இவர்களின் காதலை சுனில் தத்தின் பெற்றோர் கடுமையாக எதிர்ப்பார்கள். இந்நிலையில், சுனில் தத்தின் தந்தை அவரது மேனேஜரால் கொல் லப்படுவார்.

அந்தப் பழி சுனில் தத் மீது விழும். அவரை காப்பாற்ற, கொலைப்பழியை பத்மினி ஏற்றுக் கொள்வார். இறுதியில் உண்மை குற்றவாளி யார் என்பது தெரியவர, சுனில் தத்தின் அம்மாவும், தங்கையும் பத்மினியை ஏற்றுக் கொள்வார்கள்.

தமிழில் மல்லிகா போன அளவுக்குக்கூட அதன் இந்தி ரீமேக் பாயல் போகவில்லை. சில திரைப்படங்களை திரைக்கதை செம்மைப்படுத்தி மறுபடி எடுத்தால் வெற்றி பெறும். அந்தத் தகுதி மல்லிகாவுக்கு உண்டு.

**இந்தப் படத்தில் காஸ்ட்யூம் டிசைனராக எம்.ஜி. நாயுடு பணியாற்றினார். இவர் பிற்காலத்தில் தோற்றுவித்ததுதான் பெண் களுக்கு பிரத்யேகமான உடைகளை கொண்ட நாயுடு ஹால்.**



# தி.நகர் ரெங்கநாதன் தெரு.....?

1920களில் யார் ஒருவர் ஒரு தெருவில் முதலில் வீடு கட்டி குடியேறுகிறாரோ, அவர் பெயரையே அந்த தெருவுக்கு வைப்பது வழக்கம்.

அந்தக் கால சென்னை மாகாணத்தில் உயர் அரசு அதிகாரியாய் பணி புரிந்து, ஓய்வு பெற்ற தூப்பில் ரெங்க ஸ்வாமி அய்யங்கார் என்பவர்தான், முதன்முதலில் அந்தத் தெருவில் வீடு கட்டி குடியேறினார். அதனால் அவருடைய பெயரையே, அதாவது தூப்பில் ரெங்க ஸ்வாமி அய்யங்கார் தெரு என்று தெருவுக்கு பெயர் வைக்க, சென்னை நகர நிர்வாக அதிகாரிகள் அவரை அணுகியபோது, அவர் என் பெயர் வேண்டாம்.

'ஸ்ரீரங்கத்து ரெங்கநாதன் தெரு' என்று பெயர் வையுங்கள் என்று வேண்டுகோள் விடுக்க அந்தப் பெயரே வைக்கப்பட்டது.

நாளடைவில் பெயரில் இருந்த 'ஸ்ரீரங்கத்து' என்ற வார்த்தையை உச்சரிக்க சிரமப்பட்ட நம்ம சென்னை மக்கள் ரெங்கநாதன் தெரு என்று சுலபமாக சொல்ல ஆரம்பித்து இப்போது நெரிசலில் சிக்கி நசுங்கி கஷ்டப்பட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள்.

# நாயை துரத்தியடித்த பைடன்



இந்தப் படத்தில் உள்ள நாய், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன் இருவரின் அன்புக்குரிய செல்லப்பிராணியான 'கமாண்டர்' எனும் நாய் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

'ஜெர்மன் ஷெஃபர்ட்' வகையைச் சேர்ந்த 'கமாண்டர்', 2021ஆம் ஆண்டு, குட்டியாக இருந்த போது வெள்ளை மாளிகைக்குக் குடியேறியது. தற்போது அதற்கு இரண்டு வயது.

'கமாண்டர்', வெள்ளை மாளிகை ஊழியர்கள் சிலரைக் கடித்ததால், புதன்கிழமை (அக். 4) அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறினார்.

அதிபரின் ரகசியப் படைப் பிரிவு அதிகாரிகள் 11 பேரை அது கடித்ததாகக் கூறப்படுகிறது.

அதிபரும் அவர் மனைவியும் வெள்ளை மாளிகையில் வேலைபார்ப்போரின் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்துவதாகவும் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டோரின் பொறுமைக்கும் ஆதரவுக்கும் இருவரும் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே 'மேஜர்' எனப் பெயரிடப்பட்டுள்ள நாயையும் இதே காரணத்துக்காக பைடன் தம்பதி வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்றியது குறிப்பிடத்தக்கது.



ஆசிரியர்:
ரூபாய் நோட்டப் பத்தி மூனு வரில ஏதாவது சொல்லு?!

மாணவன்:
RBI அடிக்குது! !
SBI கொடுக்குது!!
CBI புடிக்குது!!





நண்பன்1:
மச்சி வாழ பிடிக்கல டா

நண்பன்2:
வாழ பிடிக்கலன்னா தென்ன மரம் வைக்க வேண்டியது தான.

ஆசிரியர்:
இந்த period முழுக்க நீ வெளியில நில்லு அப்போ தான் உனக்கு அறிவு வரும்.

மாணவன்:
அப்போ நீங்க பாடம் சொல்லி கொடுத்து அறிவு வராதா????

ஆசிரியர்:
?????





மகன்: அப்பா எனக்கு பைக் வாங்கி கொடுங்க.

அப்பா: கடவுள் நமக்கு 2 கால் எதுக்கு கொடுத்திருக்காரு?

மகன்: ஒண்ணு கியர் போட..
இன்னொண்ணு பிரேக் போட...



# மாட்டு உழைப்பு வேண்டும் ஊழியர்களின் நலன் வேண்டாம் முதலாளிகள்

ஒரு ஊரில் வியாபாரி ஒருவன் தனது ஊரிலிருந்து தினமும் சரக்கு மூட்டைகளைக் கொண்டு சென்று பக்கத்து ஊர் சந்தையில் விற்பது அவனது தொழில். இதற்காக மாட்டுவண்டி ஒன்றை அவன் வைத்து இருந்தான்.

ஒரு நாள் அவன் வண்டியில் பூட்டும் மாடு அவனிடம் வந்து, “எஜமான்! இரண்டு ஆண்டுகளாக நான் உங்களிடம் வேலை செய்கிறேன். ஆனால் நான் செய்யும் வேலைக்கு நீங்கள் எனக்கு சாப்பிட கொடுக்கும் புற்களின் அளவோ மிகக் குறைவு. தயவு செய்து எனக்கு நீங்கள் கொடுக்கும் புல்லின் அளவை அதிகரியுங்கள்” என்றது.

மாடு சொன்ன தைக் கவனமாக கேட்ட வியாபாரி, “மாடே! நீ கடினமாக உழைப்பதுஉண்மையே. ஆனால் பக்கத்து வீட்டுக்காரன் மாடு 25 மூட்டைகளை தன் வண்டியில் சுமக்கிறது. ஆனால் நீயோ தினமும் 20 மூட்டைகளை மட்டுமே சுமக்கிறாய்.



நீ அதிக மூட்டைகளைச் சுமந்தால் உனக்கு புல்லின் அளவை அதிகரிப்பதைப் பற்றி யோசிக் கிறேன்'' என்றான்.

பக்கத்து வீட்டு மாடு பஞ்சு மூட்டைகளை மட்டுமே சுமக்கிறது என்பதை அறியாமல் இந்த மாடும் அதிக மூட்டைகளைச் சுமக்க ஒப்புக் கொண்டது.

இப்படியே ஓராண்டு சென்றது. மாடு மீண்டும் சென்று வியாபாரியிடம் புல்லின் அளவை அதி கரிக்க கேட்டது.

அதற்கு வியாபாரி, "மாடே! அதிக பாரம் ஏற்றியதால் நம்முடைய பழைய வண்டி பாதிப் படைந்து விட்டது. எனவே நான் இப்போது புது வண்டி செய்ய சொல்லியுள்ளேன். அதற்கு ஆகும் செலவை வேறு நான் பார்க்க வேண்டும். இன்னும் சற்று நாள் பொறுத்துக் கொள். நான் புல்லின் அளவை நிச்சயம் அதிகரிக்கிறேன்'' என்றான். வேறு வழியின்றி மாடும் ஒத்துக் கொண்டது.

புது வண்டி வந்த ஆறு மாதங்களுக்கு பின் மாடு மீண்டும் வியாபாரியிடம் சென்று வழக்கமான கோரிக்கையை வைத்தது. இப்போது வியாபாரி, "மாடே! இப்போதெல்லாம் உன்னுடைய வேகம் மிகக் குறைந்து விட்டது. பக்கத்துக்கு ஊருக்கு செல்ல முன்பை விட அதிக நேரம் எடுத்துக் கொள்கிறாய். இதனால் நான் வியாபாரம் செய்யக் கூடிய நேரம் குறைந்து விட்டது. எனவே உனக்கு அதிக புல் தருவது இப்போதைக்கு சாத்தியமில்லை'' என்றான்.

கோபமடைந்த மாடு, "எஜமான்! இந்தப் புது வண்டியின் பாரம் பழைய வண்டியை விட மிக அதிகம். இந்த கனத்தையும் சேர்த்து இழுக்க வேண்டியதாலேயே என்னால் முன்பு போல விரைவாக செல்ல முடியவில்லை'' என்றது.

அதற்கு வியாபாரி, "மாடே! நீ என்ன காரணம் சொன்னாலும் உன்னால் எனக்கு அதிக லாபத்தை பெற்றுத் தர முடியவில்லை. நான் உன் மேல் ஏற்றும் மூட்டைகளின் எண்ணிக்கையை வேண்டுமானால் குறைத்து விடுகிறேன்.

ஆனால் நீ அதிக புல் கேட்காதே'' என்றான். தன் இத்தனை ஆண்டு உழைப்பும் வீணாகி விடும் என்று பயந்த மாடு, "வேண்டாம் எஜமான். நான் எப்படியாவது வேக மாக சென்று உங்களுக்கு அதிக லாபம் பெற்றுத் தந்து விடுகிறேன்'' என்று கூறியது.

மறுநாள் முதல் மாடு தன் சக்தியெல்லாம் திரட்டி வேகமாக ஓட ஆரம்பித்தது. மீண்டும் முன்பு எடுத்து கொண்ட அதே நேரத்திலேயே பக்கத்துக்கு ஊருக்கு சென்று வியாபாரியை சேர்க்கத் தொடங்கியது. ஆனால் மிகக் கடின உழைப்பால் ஒரே மாதத்திலேயே நோயுற்று படுத்த படுக்கையானது.

வழக்கமாக சாப்பிடும் புல்லைக் கூட அதனால் சாப்பிட முடியவில்லை. சில நாட்கள் கழித்து வியாபாரி, "மாடே! உன்னை நல்ல விலைக்கு ஒருவர் கேட்கிறார். அவரிடம் உன்னை விற்று விடப் போகிறேன்'' என்றான்.

"எஜமான்! நான் இப்போது இருக்கும் நிலைமையில் என்னால் எந்த வேலையும் செய்ய முடியாது. என்னை ஏன் அவர்கள் விலைக்கு கேட்கிறார்கள்?'' என்றது.

வியாபாரி அதற்கு "அவர்கள் உன்னை வேலை செய்யச் சொல்ல வாங்கவில்லை. உன்னைக் கொன்று உன் தோலை எடுக்கவே உன்னை விலைக்குக் கேட்கிறார்கள்'' என்றான்.

வியாபாரி சொன்ன பதிலைக் கேட்டதும் மாட்டிற்கு கண்களில் நீர் வர தொடங்கியது.

"எஜமான்! நீங்கள் செய்வது அநியாயம். உங்கள் பேச்சை நம்பி மாடாய் உழைத்தாலேயே நான் நோயுற்றேன். இல்லாவிடில் நான் நீண்ட காலம் ஆரோக்கியமாக இருந்திருப்பேன். நீங்கள் செய்தது துரோகம்'' என்றது.

அதைக் கேட்ட வியாபாரி, "நான் செய்தது துரோகம் இல்லை. ஒரு எஜமானனின் லட்சியம் தன் தொழிலாளியிடம் முடிந்த அளவு அதிக வேலை வாங்கி லாபம் பெறுவது. நான் அதையே செய்தேன். உன்னால் ஐந்து ஆண்டுகளில் சம்பாதிக்க வேண் டிய பணத்தையும் மூன்றே ஆண்டுகளில் சம்பாதித்து விட்டேன். இப்போது உன்னை விற்பதன் மூலமும் பணம் சம்பாதிக்க போகிறேன். என்னுடைய அதிக லாபம் பெறும் நோக்கம் நிறைவேற உன்னுடைய ஆசையை மூலதனமாக்கி கொண்டேன். நீ முதல் முறையிலேயே சுதாரித்து கொண்டிருந்தால் தப்பித்து விட்டு இருக்கலாம்'' என்றான்.

மாடு தன் முட்டாள் தனத்தை எண்ணி நொந்து கொண்டது. தற்போது மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இப்படித்தான் தங்கள் உடலை வருத்தி உழைத்துக் கொடுத்தாலும் முதலாளிகள் அவர்களின் உழைப்பை சுரண்டும் முதலையாகவே உள்ளது வேதனைதான்.






# தூங்கா நகரமல்ல

# தூசி நகரமான சென்னை

நிலப்பரப்பில் சிறியதாக இருந்தாலும் அடைக் கலம் தேடி, வந்தாரை வாழ வைக்கும் மிகப் பெரிய கொடை உள்ளத்தாலும், வேகமான வளர்ச்சியாலும் இந்தியாவிலேயே சென்னை மாவட்டம் உயர்ந்த இடத்தில் உள்ளது.

ஒருவகையில் இந்த வளர்ச்சி மகிழ்ச்சியளித் தாலும், உள் கட்டமைப்பில் அதள பாதாளத்தில் உள்ளதாகவே விளங்குவதால் சிரமமான வாழ்க்கை முறையை கொண்ட மாநகராகவும் சென்னை மாறி வருவது வேதனையளிக்கும் விஷயம்.

வாகனங்களும், மக்களும் பெருக பெருக... அதற்கேற்ப மாவட்ட சீரமைப்பும் வளர்ச்சி அடையவேண்டும், ஆனால் குண்டு சட்டியிலேயே குதிரை ஓட்டுவதைப் போன்று பராமரிப்பு பணிகள், வளர்ச்சி பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதால் சென்னையில் வசிக்கும் மக்களின் மனோ நிலை மிக இறுக்கத்தை சந்திக்கும் வகையில் மாறிவருகிறது.

குறிப்பாக சாலை வசதி மேம்பாடு வளர்ச்சி அடைவதற்கு பதில் குறுகி வருகிறது. குறிப்பாக ஒவ்வொரு தெருவிலும் உள்ள சாலைகளில் மழைநீர் வடிகால் வைப்பதற்கு தோண்டும்



பள்ளங்களால் 20 அடி சாலை கூட 17 அடியாக சுருங்கிவிடுகிறது.

மழை நீர் வடிகால் அமைக்கும் நிறுவனங்கள் சாலையை விட உயரத்தில் மழை நீர் வடிகால்களை அமைத்துவிடுவதாலும், ஒரு பக்கம் பள்ளமாகவும், மறுபக்கம் உயரமாகவும் அமைந்து விடுகிறது. டெண்டரை முடிக்க ஏனோ தானோ என்று கடமைக்கு கட்டிச்செல்வதால் இந்த நிலை நிலவுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இன்னொரு பக்கம் மெட்ரோரயில் பணிகளுக்காக பிரதான சாலைகளில் பள்ளம் தோண்டிவிடுவதால், வாகனங்கள் சந்து பொந்தில் பயணிக்க நேறுகிறது.

அவ்வாறு செல்லும் சந்து பொந்துகளில் வாகனங்களை திரும்பிவிடும்போது அதற்கேற்ப திருப்பிவிடப்படும் சாலைகள் சீரமைக்காமல் இருக்கும் சாலையிலேயே கனரக வாகனங்கள் முதற்கொண்டு, சாதாரண வாகனங்கள் வரை சென்று வருவதால், சாதாரண சாலைகள் கூட மிகப்பெரிய சேதத்தை சந்தித்து வருவதால், மண், புழுதி அதிகமாக வெளிவருவதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்தை சந்திக்க நேரிடுகிறது.

குறிப்பாக பீக் அவர்ஸ் என்று அழைக்கப்படும் காலை, மத்தியம், மாலை சமயங்களில் மக்கள் மீது புழுதி வாரியிறைத்ததைப் போன்று காற்றில் புழுதி பரவுவதால், டஸ்ட் அலர்ஜி பெருகும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

தற்போது ஒருபக்கம் கால நிலை மாற்றத்தால் சளி இருமல், ஜூரம் போன்றவை பெருகிவரும் காலத்தில் அதனுடன் சென்னைப் புழுதியும் சேர்ந்து மக்களை வாட்டுவதால் கூடுதலான அவதிக்குள்ளாகின்றனர் சென்னைவாசிகள்.

ஒரே சமயத்தில் மெட்ரோ ரயில் பணி, சாலை அமைக்கும் பணி, மழைநீர் சேகரிப்பு பணி, குடிநீர் குழாய் பதிக்கும் பணி என்று ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு தெருவிலும் ஏதாவது ஒரு பணி நடைபெற்று வருவதால், சென்னை முழுவதும் ஒட்டை உடைச்சலாக மேடு பள்ளமாக மாறிவருகிறது.

இதில் பெரும்பாலாக பாதிக்கப்படுவது கீழ்த்தட்டு மக்களும், நடுத்தர மக்களும்தான். மாநகப் பேருந்து, ஷேர் ஆட்டோ, இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் மக்களுக்கு சென்னை வாழ்க்கை தற்போது தூசி மண்டல வாழ்க்கையாகவே மாறி விட்டதாக கூறுகின்றனர்.

குறிப்பாக மழைக்காலங்களில் குண்டும் குழியு மான சாலையில் செல்லும்போது எந்த இடத்தில் குழி உள்ளது. எந்த இடத்தில் மேடு உள்ளது என்பது தெரியாமல் குருட்டான் போக்கில் பயணிக் கும் சூழல் நிலவுகிறது.

ஆண்ராய்டு போனில் மேடு பள்ளத்தில் வாகனம் ஓட்டுவது போன்றே விளையாட்டை விளையாடு வதைப் போன்று, தற்போது சென்னைவாசிகள் வாகனம் ஓட்டுவது, ஆண்ராய்டு போனில் விளையாடுவதற்கு பதில் லைவ்வாக தங்கள் வாகனங்களை ஓட்டும் அனுபவம் போன்றே உள்ளதாக கருதுகின்றனர்.

சமீபத்தில்கூட மேற்கண்ட அனுபவத்தை தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அனுபவ ரீதியாக உணர்ந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சென்னை கோடம்பாக்கத்தில் வசித்து வரும்

நடிகர் விஜய் ஆண்டனி மகள் தற்கொலை செய்து கொண்டதால், விஜய் ஆண்டனிக்கு ஆறுதல் தெரிவிக்க தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி கோடம்பாக்கத்திற்கு வந்திருந்தார்.

ஆனால் ஒருகுறிப்பிட்ட இடத்திற்கு மேல் கார் செல்ல முடியாத அளவு மழை தண்ணீரும், மேடு பள்ளங்களும் இருந்ததால், காரில் இருந்து இறங்கி நடந்தே சென்று விஜய் ஆண்டனிக்கு ஆறுதல் கூறிவிட்டு சென்றார்.

அந்த இடத்திலேயே மேற்கண்ட இடத்தை சரி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுச் சென்றார்.

ஆளும் கட்சி தலைவரின் மகன், அதுவும் அமைச்சராக உள்ள உதயநிதிக்கே சென்னை சாலைகளின் அவலங்களின் நிலையையும், தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் முதல்வரிடம் தெரிவித்ததால்தான், அடுத்த நாளே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடனடியாக சென்னை சாலைகளை புதுப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும் சென்னை சாலைகளின் நிலையை பெரும்பாலான அமைச்சர்கள், எம்.எல்.ஏக்களுக்கு தெரியாமல் தமிழக அதிகாரிகள் மறைத்துவிடுவதாகவும் ஒரு புகார் எழுந்துள்ளது.

அமைச்சர்கள் எம்.எல்.ஏக்கள் செல்லும் சாலைகளை மட்டும் சரியானமுறையில் பராமரித்து மற்ற சாலைகளில் கவனம் செலுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு பெருமளவில் கூறப்படுகிறது.

அமைச்சர்கள் கலந்து கொள்ளும் விழாக்களின் போது ஏனோ தானோ என்று சாலைகளை சீர மைப்பது, சாலைகளில் சுண்ணாம்பு போட்டுதூய்மையாக இருப்பதாகவும் காட்டிவிடுவதால், அவர்களுக்கு சென்னை சாலைகளின் நிலை தெரியவில்லை என்பதால் முதல்வர் முதற்கொண்டு, அமைச்சர் மற்றும் எம்.எல்.ஏக்கள் திடீர் சாலை ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

தற்போது பனி பொழிவைப் போன்று தூசு மண்டலங்கள் மக்களை சூழ்வதால் டஸ்ட் அலர்ஜியால் பெருமளவில் மக்கள் அவதிப்படுவதாக வும், இதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக, கொரானா காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முகக் கவத்தை கொரானா காலம் முடிந்தும் கூட, புழுதிக்கு பயந்து பயன்படுத்துவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

அம்பத்தூரிலிருந்து கோயம்போடு, அல்லது போரூரில் இருந்து வடபழனி, பாரிமுனையிலிருந்து கோயம்போடு என்று சென்னையின் தொடர்ந்து ஒரு 2 மணிநேரம் பயணித்து வந்தால் உடல் முழுவதும் தூசி புழுதியின் தாக்கம் அதிகமாக



இருப்பதால், வெளியே சென்று வீட்டிற்கு வந்தாலே அவசியம் குளித்தே ஆக வேண்டும் என்ற சூழ்நிலை நிலவுவதாக கூறப்படுகிறது.

பொருளாதாரத்தை சமாளிக்க புழுதியையும், குண்டு குழி சாலைகளையும் சகித்து கொண்டு சென்னையில் வசிக்க வேண்டிய கட்டாயத்தில் பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.


தற்போது குறிப்பாக சென்னையில் இளம் வயது மரணம் என்பது மெல்ல அதிகரித்து வருவதற்கு மைல்டு ஆர்ட் அட்டாக்தான் காரணம் என்று கூறப்படுகிறது. இந்த மைல்டு ஆர்ட் அட்டாக்குக்கு, புழுதி கூட காரணமாக இருக்கலாமா என்று ஆராய்ச்சி செய்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

பொதுவாக மதுரையை தூங்கா நகரம் என்று கூறுவார்கள், தற்போது சென்னையிலும் 24 மணிநேரம் செயல்படும் தொழில்சாலைகள், தொழில் நிறுவனங்களால் பொதுமக்கள் 24 மணிநேரம் புழங்கும் நகராக சென்னை மாறிவருகிறது.

தற்போது சென்னையை தூங்கா நகரம் என்றும் ஒருசிலர் கூறிவருகின்றனர். ஆனால் தற்போது சென்னை தூங்கா நகரம் என்பதற்கு பதில் தூசி நகரம் என்றும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

# விபரீதத்தில் முடியும்

## ஆண்ட்ராய்டு பயன்பாடு





கேரளாவைச் சேர்ந்த ஒரு பெண்ணின் அந்தரங்க வீடியோக்கள், அவரது வீட்டில் இருந்த ஸ்மார்ட் டிவி மூலம் இணையத்தில் பரவிய சம்பவம், கேரளாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது

எப்படி நடந்தது இந்தக் குற்றம்?

கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த திருமணமான இளைஞர் ஒருவர், அயல்நாட்டில் தங்கி வேலை பார்த்து வருகிறார். அவர் சில வாரங்கள் முன்பு தனது கணினியின் மூலம், தனது மனைவியுடன் ஸ்கைப்பில் உரையாடியுள்ளார்.

பின்னர், இணையத்தில் வந்த விளம்பரம் ஒன்றில் இருந்த சில புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பார்த்துள்ளார். அப்போது, அவருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.அந்தப் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில், அவரது மனைவி உடைமாற்றுவது உள்ளிட்ட அந்தரங்கக் காட்சிகள் பதிவாகி இருந்தன.

அவர் தனது மனைவியிடம் இது பற்றிக் கேட்டபோது, அவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. இதனால், தங்கள் படுக்கை அறையில்யாரோ ரகசியமாக கேமரா பொருத்தி விட்டதாகவே இருவரும் பயந்தனர்.



இந்நிலையில், கேரளாவில் உள்ள மனைவியின் படங்கள் எப்படி இணையத்திற்கு எப்படி வந்திருக்கும் என்று யோசித்த இளைஞர், அயல்நாட்டில் இருந்தபடியே கேரள சைபர் கிரைம் காவல் பிரிவில் புகார் அளித்தார்.

கேரளாவில் உள்ள இளைஞரின் வீட்டுக்குச் சென்று ஆய்வு செய்த காவல்துறையினர், படுக்கையறையில் உள்ள ஸ்மார்ட் டிவி மூலம் இருவரும் ஸ்கைப்பில் உரையாடும் வழக்கத்தை வைத்துள்ளதையும், அந்த உரையாடல் முடிந்த பின்னரும் மனைவி ஸ்மார்ட்டிவியின் இணைய இணைப்பை துண்டிக்காததால், ஹேக்கர்கள் ஸ்மார்ட் டிவியின் கேமரா மூலம் அந்த அறையில் நடப்பது அனைத்தையும் படம் பிடித்து, அதே ஸ்மார்ட் டிவி மூலம் அந்தரங்கக் காட்சிகளை இணையத்தில் பரப்பியதையும் கண்டறிந்தனர்.

கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவின் சூரத் நகரைச் சேர்ந்த ஒரு இளம் தம்பதிக்கும் இதேதான் நடந்தது. இன்னும் எத்தனை வீடுகளில் பெண்கள் இப்படியாகக் கண்காணிக்கப்படுகிறார்கள் என்று தெரியவில்லை.ஸ்மார்ட் டிவி,ஆண்ட்ராய்டு போன்கள் ஆகியவை ஹேக் செய்யப்படும் போது, அவற்றில் உள்ள கேமரா உள்ளிட்ட அனைத்து சாதனங்களையும் ஹேக்கர்கள் பயன்படுத்தலாம். கவனமாகவும் இருக்க வேண்டும். படுக்கையறைகளில் இவற்றைப் பயன்படுத்தாமலேயே இருப்பது சிறந்தது.

# டாஸ்மாக் Help

**விடியற்காலை 3 மணி. மழை வேறு பெய்து கொண்டிருந்தது. ஒரு வீட்டில் கணவன் மனைவி தூங்கிக் கொண்டிருந்தனர்.**

அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது.

கணவன் மட்டும் எழுந்து போனான்.

கதவை திறந்தால் அங்கே ஒரு டாஸ்மாக் குடிகாரர் நின்று கொண்டிருந்தார்.

“சார் ஓர் உதவி.. கொஞ்ச அங்க வந்து தள்ளி விட முடியுமா?” என்று அந்த டாஸ்மாக் குடிகாரர் கேட்டார்.

கணவனோ “முடியவே முடியாது ஏம்பா விடிய காலை 3 மணிக்கு தொந்தரவு செய்யறே”ன்னு சொல்லிட்டு கதவை சாத்திட்டு படுக்கப் போய் விட்டான்.

“யாரது?” என்று மனைவி கேட்டாள்.

“எவனோ ஒரு டாஸ்மாக் குடிகாரன், வந்து காரோ எதையோ தள்ளி விட முடியுமான்னு கேட்கிறான்”

“நீங்க உதவி செஞ்சீங்களா?”

“இல்லை, காலைல 3 மணி, மழை வேற பெய்யுது எவன் போவான்?”

“பார்த்தீங்களா? 3 மாசம் முன்னாடி நம்ம கார் ரிப்பேராகி நடு ரோட்ல நின்னப்ப இரண்டு பேர் நமக்கு உதவி செஞ்சாங்களே? இப்பநீங்க அது மாதிரி உதவி செய்யலன்னா எப்படி? கடவுள் டாஸ்மாக் குடிகாரர்களையும் நேசிப் பார்”

கணவன் எந்திரிச்சான், ட்ரஸ் பண்ணிக்கிட்டு மழையில் நனைஞ்சுகிட்டே வெளியே போனான்.

இருட்டுல, மழையில் சரியா தெரியாததால சத்தமா கேட்டான்.

“ஹலோ, நீங்க இன்னும் இருக்கீங்களா?”

“ஆமா சார்”

“ஏதோ தள்ளி விடனும்னு சொன்னீங்களே இப்ப செய்யலாமா?”

“ஆமா சார் வந்து கொஞ்சம் தள்ளிவிட்டீங் கன்னா நல்லா இருக்கும்”

“எங்கே இருக்கீங்க?

“இங்கதான் ஊஞ்சல் மேல உட்கார்ந்திருக் கேன் வாங்க வந்து தள்ளிவிடுங்க....”

அட நன்னாரி பயலே...

எப்ப பாரு
கருத்த எதிர்பாக்காதீங்க
லைஃப எஞ்ஜாய் பன்னுங்க!



# உடலின் நோய் எதிர்பாற்றலை அதிகரித்து கிருமிகளை அழிக்கும்
# வேப்பம் பூ ரசம்

ஒரு பாத்திரத்தில் சிறிது நெய் விட்டு உருகியதும் சிறிது பெருங்காயப்பொடி, கடுகு, வரமிளகாய், சிறிது வேப்பம் பூ காய்ந்தது இவை அனைத்தையும் சேர்த்து வதக்கி பின் புளிக்கரைசல் மஞ்சள் பொடி, உப்பு சேர்த்து நீர் விட்டு மிளகு, சீரகம், பூண்டு தட்டிப்போட்டு லேசாக ஒரு கொதி வந்தவுடன் கறிவேப்பிலை கொத்தமல்லி தூவி இறக்கி விட வேண்டும்.



இந்த வேப்பம் பூ ரசம் அருந்தினால் வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றும்.

உயர் ரத்த அழுத்தத்தை குறைத்து சமன் செய்யும். பித்தத்தை சமன் செய்யக்கூடியது. ஈரலை பலப்படுத்த கூடியது.

பசியை தூண்டக்கூடியது. செரி மான கோளாறுகளை போக்க கூடிய தாக அமைகின்றது.

ரத்தத்தில் உள்ள அதிக கொழுப் பை குறைக்க கூடியது. மாரடைப்பை தடுக்க கூடியது. மாதம் ஒரு முறையாவது வேப்பம் பூ ரசம் சாப்பிட வேண்டும். வேப்பம் பூ துவையல் செய்து சாப்பிடலாம்.

வேப்பம் பூ ஒரு டீ ஸ்பூன், கருஞ்சீரகம் கால் டீஸ்பூன், மஞ்சள் கால் டீஸ்பூன் இவற்றை ஒரு டம்ளர் நீர்விட்டு கசாயமாக்கி தினசரி 50ml அளவுக்கு குடித்து வர கை, கால் எரிச்சல் தீரும். நரம்புகளில் ஏற்படும் அலர்ஜி, தேய்வு சரி யாகும். அதோடு உள் உறுப்புகளும் பாதுகாக் கப்படும். வேம்பு ஒரு முத்தோஷ சமனி.


கீதா சமையல்
geetha samayal YouTube channel
ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

# வித்தியாச வழக்கு

முதியவர் ஒருவர் தனது புகாரை (வழக்கை) நீதிபதியிடம் முன்வைக்க நீதிமன்றத்திற்குள் நுழைந்தார்.

நீதிபதி கேட்டார்:

யாருக்கு எதிராக வழக்கு கொடுத்துள்ளீர்கள்.

தந்தை கூறினார்: தனது மகனுக்கு எதிராக.

நீதிபதி ஆச்சரியமடைந்து கேட்டார்: என்ன புகார்

முதியவர் கூறியதாவது:

எனது மகனின் திறமைக்கு ஏற்ப எனக்கு மாதாந்திர செலவு கேட்டு வருகிறேன்.

நீதிபதி கூறினார்:

இது உங்கள் மகன் மீதான உங்கள் உரிமை, வாதங்களைக் கேட்கத் தேவையில்லை.

முதியவர் கூறினார்: கனம் நீதிபதி அவர்களே..... நான் பணக்காரனாக இருந்தாலும், பணத்தேவை இல்லாவிட்டாலும், என் மகனிடமிருந்து மாதச் செலவுகளை தொடர்ந்து பெற விரும்புகிறேன்

நீதிபதி ஆச்சரியமடைந்தார்.

அவருடைய மகனின் பெயர் மற்றும் முகவரியை எடுத்துக் கொண்ட பிறகு அவரை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

மகன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது

நீதிபதி அவரிடம் கேட்டார்: இது உங்கள் தந்தையா?

மகன் சொன்னான்: ஆம், இவர் என் தந்தை.

நீதிபதி கூறினார்: மாதாந்திர செலவுகள் எவ் வளவு குறைவாக இருந்தாலும் தொடர்ந்து செலுத்த வேண்டும் என்று உங்கள் தந்தை உங்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளார்.

மகன் ஆச்சரியத்துடன் சொன்னான்: அவரே பெரும் பணக்காரராக இருக்கும்போது என் உதவி தேவையில் லையே? என்னிடம் ஏன் செலவுக்கு கேட்கிறார்கள்? என்றார்.

நீதிபதி கூறினார்: இது உங்கள்தந்தையின் கோரிக்கை, அவர் தனது கோரிக்கையில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் இருக்கிறார்.

முதியவர் கூறினார்: நீதிபதிஅவர்களே... மாதம் ஒருரூபாய் மட்டும் அவர் கையால் எம்மிடம் கொடுத்தால் நான் மகிழ்ச்சி யடைவேன்.

நீதிபதி கூறினார்; அது உங்கள் உரிமை நானும் அதன்படி உத்தரவிடுகிறேன்.

தந்தைக்கு வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு மாதமும் ஒரு ரூபாயை தன் கையால் தாமதமின்றி வழங்க வேண்டும்" என்று உத்தரவிட்ட நீதிபதி நீதிமன்ற அறையை விட்டு வெளியேறும் முன்,

வயதான அந்த தந்தையிடம், உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால், எனக்கு ஒரு சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டும். நீங்கள் பணக்காரராக இருந்தும் இந்த வழக்கை ஏன் தாக்கல் செய்தீர்கள்?அதுவும் மிகக் குறைந்த தொகையை ஏன் கேட்டீர்கள்?

முதியவர் அழுது கொண்டே சொன்னார்: மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே இந்த என் மகனைக் காண நான் ஏங்குகிறேன். அவர் தனது வேலையில் மிகவும் மும்முரமாக இருக்கிறார். என் மகனின் மீது நான் ஆழ்ந்த அன்பில் இருக்கும் என்னால் அவரது முகத்தைப் பார்க்க முடியவில்லை. நான் அவரைப் பற்றி நினைக்கும் எல்லா நேரங்களிலும், அவர் என்னுடன் தொலை பேசியில் கூட பேசுவதில்லை.

மாதம் ஒருமுறையாவது அவரைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே, இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன்.

இதைக் கேட்ட நீதிபதி மற்றவர்களுடன் சேர்ந்து அடக்க முடியாமல் அழத் தொடங்கினார்.

மேலும் வயதான தந்தையிடம் கூறினார்:

இறைவன் மீது ஆணையாக, இந்த உண்மையை நீங்கள் எனக்கு முன்பே தெரிவித்திருந்தால், நான் அவரைச் சிறைக்கு அனுப்பி அவருக்கு தண்டனை கொடுத்திருப்பேன்.

வயதான தந்தை சிரித்துக்கொண்டே கூறினார்: "நீதிபதி அவர்களே உங்களின் அந்த உத்தரவு என் மனதை மிகவும் புண்படுத்தியிருக்கும்.

"பெற்றோர்கள் தங்கள் இதயங்களில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நேரம் கடந்து செல்வதற்கு முன்பே மகன்கள் அறிந்திருக்க விரும்புகிறேன்.



# சாப்பிடுவதில் பனிரெண்டு முறைகள்

# வழிகாட்டிய முன்னோர்கள்

நமது முன்னோர்கள் கடைபிடித்த பல்வேறு பழக்கவழக்கங்களில் உணவு சாப்பிடும் முறையை அனைவரும் அவசியம் அறிந்திருக்க வேண்டிய ஒன்று. உணவு உண்ண வேண்டிய அவசியம் இல்லையென்றால் இந்த உலகில் யாருக்கும் எந்த வேலையும் இல்லை.

வயிற்று பசிக்காக உழைக்க கற்றுக்கொண்ட மனிதன் நாளடைவில் சொத்து சுகம்போன்ற வற்றிற்கு ஆசைப்பட்டு தனது வாழ்நாளை பணம் சம்பாதிப்பதில் மட்டுமே கழிக்கின்றான்.

ஒரு ஜான் வயிற்றை கட்டிக் காக்கவில்லையென்றால் சம்பாதித்ததை அனுபவிக்கமுடியாமல் போய்விடும் என்பதை உணர்ந்த நம் முன்னோர்கள் வயிற்றுக்குக் கொடுக்கப்படும் உணவுகளுக்கு சில வரைமுறைகளை வெகு அழகாக கூறியுள்ளனர்.

1. அருந்துதல் மிகச் சிறிய அளவே உட் கொள்ளல்.
2. உண்ணல் பசிதீர உட்கொள்ளல்.
3. உறிஞ்சல் வாயைக் குவித்துக் கொண்டு நீரியற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளல்.
4. குடித்தல் நீரியல் உணவை (க ஞ் சி போ ன் ற வை) சிறிது சிறிதாக பசி நீங்க உட்கொள்ளல்.
5. தின்றல் தின்பண்டங்களை உட்கொள்ளல்.
6. துய்த்தல் சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளுதல்.
7. நக்கல் நாக்கினால் துலாவி உட்கொள்ளுதல்.
8. நுங்கல் முழுவதையும் ஓர் வாயில் ஈர்த்துறிஞ்சி உட்கொள்ளுதல்.
9. பருகல் நீரியற்பண்டத்தை சிறுகக் குடிப்பது.
10. மாந்தல் பெருவேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளுதல்.
11. மெல்லல் கடிய பண்டத்தைப் பல்லால் கடித்துத் துகைத்து உட்கொள்ளுதல்.
12. விழுங்கல் பல்லுக்கும் நாக்குக் கும் இடையே தொண்டை வழி உட்கொள்ளுதல்.

❖ முதலில் பருப்பு மற்றும் நெய் (செரிக்கும் தன்மை குறைந்த பொருட்கள் மற்றும் நமது உணவு குழாயை தன்மையாக்கும் பொருட்கள்),

❖ பிறகு குழம்பு(ருசியுடன், தன்மையான உணவு குழா யை வருடும்),

❖ பிறகு ரசம் ( இது வரை உண்ட அனைத்தையும் செரிக்கசெய்யும் ),

❖ பிறகு மோர் ( வயிறார உண்டபின் உருவாகும் சூட்டைக்குறைக்கும்)

முக்கியமாக இந்த உணவுமுறைகளை வாழையிலையில் வைத்து சாப்பிட வேண்டும் என்பதை எழுதப்படாத விதியாக நமது முன்னோர்கள் கடைபிடித்துள்ளனர்.



# இளையராஜா பாடிய பாடல் கண்ணீர் சிந்திய ஜேசுதாஸ்

இசைஞானி இளையராஜா அவர்களின் பாடல் பதிவின் போது சுவையான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அன்று இளையராஜாவின் ஸ்டுடியோவில் ஒரு ரெகாடிங்.

பாடல் எல்லாம் தயார். கே.ஜே.ஜேசுதாஸ் பாடுவதாக இருந்தது. இளையராஜா முதல் எல்லா இசை கலைஞர்களும் வந்தாகி விட்டது. ஆனால் ஜேசுதாசை காணோம். சரி, அவர் வரும் வரையில் ஒரு ட்ரையல் பார்ப்போம் என முடிவு செய்து, இளையராஜா அந்த பாடலை பாடி ரெகாடிங் செய்து பார்த்தார்.




பாடல் நன்றாக வந்திருந்தது. நீண்ட நேரம் ஆகியும் ஜேசுதாஸ் வரவில்லை. பிறகு ஒரு போன் வந்தது.. சில தவிர்க்க முடியாத காரணத்தினால் தன்னால் வர இயலவில்லை என ஜேசுதாஸ் வருந்தினார்.

இளையராஜா அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த நாள் ரெகாடிங்கை வைத்துகொள்ளலாம் என கூறினார். அடுத்த நாள், ஜேசுதாஸ் ஸ்டுடியோவுக்கு வந்தார். முன்தினம் தான் பாடிய பாடலை அவரிடம் இளையராஜா கொடுத்து, "இது தான் நீங்கள் பாட வேண்டிய பாடல், இதை ஒரு முறை கேட்டு கொள்ளுங்கள்" என கூறி சென்றார்.

பாடலை முழுவதும் கேட்ட ஜேசுதாஸ்கண்கள் குளமானது. நேராக இளையராஜாவிடம்சென்றார். இப்பாடலை என்னால் பாட முடியாது என்று கூறினார்... அதிர்ச்சி அடைந்த இளையராஜாவிடம் ஜேசுதாஸ் கூறியது இது தான் "இந்த அளவுக்கு என்னால் உணர்ச்சிபூர்வமாக இந்த பாடலை பாட முடியுமா என்று தெரியவில்லை. இந்த பாடல் மக்கள் மனதில் நிலைத்து நிற்கவேண்டும் என்றால், அது உங்கள் குரலில் இருந்தால் மட்டுமே முடியும்" என்று கூறினார்.

இளையராஜா எவ்வளவோ வற்புறுத்தியும் அந்த பாடலை பாட மறுத்து, இளையராஜாவின் குரலில் அந்த பாடலை வெளிவரவைத்தர் கே.ஜே.ஜேசுதாஸ்...

அது தான் இந்த பாடல்.

"ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ"

thiraimalar.com
திரைமலர்

உங்கள் விருப்பமான துறையில்,
சாதிக்க விரும்புபவர்கள், உங்களைப் பற்றிய
தகவலை எங்களுக்கு தெரிவியுங்கள்....
வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம் 9444264610

www.thiraimalar.com இணையதளத்திலும்,
thiraimalar E-Magazine இல் வெளியிட்டு






# இந்தியர்கள் வசிக்காத நாடுகள்

உலகின் எந்த மூலைக்கு சென்றாலும், கண்டிப்பாக அங்கு ஒரு இந்தியரையாவது பார்க்க முடியும். ஆசிய நாடுகளில் இருந்து ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா வரை எல்லா நாடுகளிலும் இந்திய மக்களைக் காண முடியும். ஆனால், ஒரு இந்தியர் கூட வாழாத நாடுகளும் இருக்கத் தான் செய்கின்றன.

இந்தச் செய்தி கேட்பதற்கு புதுமையாக இருந்தாலும் இதுதான் உண்மையும் கூட... சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி நடைபெற்றது.

எந்த நாட்டில் எத்தனை இந்தியர்கள் வாழ்கி றார்கள் என்ற மேம்போக்கான கணக்கெடுப்பில் சுவாரஸ்யமான தகவலும் கிடைத்தது.

அதாவது உலகில் ஒரு சில நாடுகளில் ஒரு இந்தியர் கூட வசிக்கவில்லை என்று ஆய்வில் தகவல் கிடைத்துள்ளது மிகப்பெரிய ஆச்சரியத்தை கொடுத்துள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் செல்வாக்குடன் இந்தியர்கள் வாழ்ந்து வருகிறார்கள். உலகில் உள்ள 195 நாடுகளில் பெரும்பாலான நாடுகளில் இந்தியர்கள் வாழ்கின்றனர். அப்படி இருந்தும் எந்த எந்த நாடுகளில் இந்தியர்கள் வசிக்கவில்லை என்று பார்ப்போம். இந்தியர்கள் வசிக்காத நாடுகளில் ஒன்று வாடிகன் நகரம்...

## வாடிகன் நகரம்



0.44 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்து கிடக்கும் வாடிகன் சிட்டியில் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் மக்கள் வசிக்கின்றனர். இந்த நாட்டின் மக்கள்தொகை மிகவும் குறைவு. ஆனால் மிக ஆச்சரியமான விஷயம் என்னவென்றால். ஒரு இந்தியர் கூட இங்கு வசிக்கவில்லை... இந்தியாவில் ரோமன் கத்தோலிக்க மதத்தை பின்பற்றும் கிறிஸ்தவர்கள் அதிக அளவில் உள்ளனர் என்பது வேறு விஷயம்....

## சான் மரினோ:



ஒரு குடியரசு இதன் மக்கள் தொகை 3 லட்சத்து 35 ஆயிரத்து 620 ஆகும். இருப்பினும், இந்த மக்கள் தொகையில் ஒரு இந்தியர் கூட வசிக்கவில்லை.

இங்கு இந்தியர்கள் என்ற பெயரில் சுற்றுலாப் பயணிகளை மட்டுமே பார்க்க முடியும்....

## பாகிஸ்தான்:

நமது அண்டை நாடான பாகிஸ்தானில் இந்தியர்கள் யாரும் வசிக்கவில்லை. இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் பதற்றம் மற்றும் பொருளாதார அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தியர்கள் யாரும் இங்கு குடியேறவில்லை. இந்தியாவுக்கு ஒரு நாள் முன்னதாகவே பாகிஸ்தான் சுதந்திரம் பெற்றது. ஆனால் தூதரக அதிகாரிகள் மற்றும்



கைதிகளைத் தவிர, ஒரு இந்தியர் கூட இங்கு வசிக்கவில்லை எனக் கூறப்படுகிறது...

## துவாலு (எல்லிஸ் தீவுகள்):



உலகில் எல்லிஸ் தீவுகள் என்று துவாலு அழைக்கப்படுகிறது. இந்த நாடு ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது. இந்த நாட்டில் சுமார் 10 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். இந்த தீவில் 8 கிமீ நீள சாலைகள் மட்டுமே உள்ளன. ஆனால் ஒரு இந்தியர் கூட அங்கு குடியேறவில்லை.

## பல்கேரியா:



தென்கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள பல்கேரியா, 2019 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 69,51,482 மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் இந்திய தூதரக அதிகாரிகளைத் தவிர, எந்த இந்தியரும் குடியேறவில்லை




# இதுவரை வெளிவந்த இதழ்களை

thiraimalar.com
திரைமலர்
**www.thiraimalar.com**

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

## இணையதளங்களில் இலவசமாக படிக்கலாம்

வாரம்தோறும் நமது இதழை பெற உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும் அனுப்ப வேண்டிய இ-மெயில் முகவரி

**thiraimalarebook@gmail.com**

**Whatsup**

**9444264610 / 8838153880**

Owned, Published by N.Geetharani. Design by SMLGraphics, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : N.Geetharani, Cell: 9444264610.
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com